மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.41/17

வாக்குமூலம். வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலசுப்பிரமணியம் | ஜாதி | |
| த/பெ. | நல்லமுத்து கிருஷ்ணபிள்ளை | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 58 /2023 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 11.01.2024-ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு தாவா 1ம் பிரதிவாதியை தெரியும் 1ம் பிரதிவாதியின் குடும்பத்தில் உள்ள அனைத்து நபர்களை பற்றி எனக்கு தெரியும். எனக்கு 1ம் பிரதிவாதியின் குடும்பத்தை எனக்கு எப்படி தெரியும் என்றால் லெட்சுமணன் என்பவர் எனக்கு நண்பர் அவர் மூலமாக எனக்கு தெரியும். நான் லெட்சுமணன் வீட்டிற்கு சென்றது இல்லை கடைவீதியில் பார்த்தால் பேசுவேன். எனக்கு லெட்சுமணன் மூலமாக லெட்சுமணன் தாயார் அவரது சகோதரர் மற்றும் மனைவியை தெரியும் மேற்படி லெட்சுமணன் தற்போது உயிருடன் இல்லை மேற்படி லெட்சுமணன் 03.03.2013 ல் சாலை விபத்தில் இறந்துவிட்டார். நான் தாவா வழக்கு என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் நான் லெட்சுமணனிடம் களக்குடியில் அவரது தாயார் செட்டில்மெண்ட் ஆக எழுதி வைத்த நிலம் இருந்தது அதை 1,25,000 ரூபாய்க்கு கிரையம் பேசி ஒரு லட்சம் மூன் பணம் கொடுத்து அதன் பின்னிட்டு 09.04.2012 ல் 5000 ரூபாயும் 14.11.2012 ல் 10,000 கொடுத்து மீததொகை இருந்தபோது லெட்சுமணன் பட்டா மாற்றிவிட்டு உட்பிரிவு செய்து தருவதாக சொல்லி இருந்த நிலையில் லெட்சுமணன் சாலைவிபத்தில் இறந்துவிட்டார் அதானல் வழக்கு தொடர்ந்து இருக்கிறேன்.

2. தாவா சொத்தின் புலஎண் 106/11 H3 ஆகும். நான் வழக்கு 7 1/2 செண்ட்டுக்கு தாக்கல் செய்து இருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும் 7 1/2

செண்ட் என்று தான் குறிப்பிட்டு இருக்கிறேனா என்றால் சரிதான். தாவா சொத்தின் நான்கெல்லை கட்டுமாவடி ரோட்டிற்கு வடக்கு, காலனி ரோட்டிற்கு தெற்கு, கோவிந்தனுக்கு கிழக்கு, மாரிமுத்துவிற்கு மேற்கு ஆகும். நான் கிரைய ஒப்பந்தம் போட்ட தேதி 05.05.2011 ஆகும். அந்த கிரைய ஒப்பந்தத்தில் காலக்கெடு ஒரு வருடம் ஆகும். நான் கிரைய தொகையாக ஒப்புக்கொண்டதில் ஒரு லட்சம் கிரைய தொகையாக கொடுத்து இருக்கிறேன் என்றால் சரிதான். நான் மேற்படி கிரையத்தொகையை 1ம் பிரதிவாதியின் மகனிடம் இருந்துதான் வாங்கி இருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்தம் பற்றி 1ம் பிரதிவாதிக்கோ அவரது குடும்பத்துக்கோ தெரியாது என்றால் சரியல்ல தெரியும்.

3.1ம் பிரதிவாதி குடும்பத்தினருக்கு கிரைய ஒப்பந்தம் போட்டுக்கொண்டது தெரியாது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் வேண்டுகோளுக்குகிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.